STC .No. 34/2023
நாள் – 21.01.2026.

பு.சா.1 – திரு. பசுங்கிளி சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை )

(எதிரி ஆஜர்).

நான் 11 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 2 ஆண் குழந்தைகள், 1 பெண் குழந்தைகள் உள்ளன. என் வருமானத்தின் மூலம் தான் குடும்பம் நடத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். எனது ஆண்டு வருமானம் சுமார் 30 இலட்சம். நான் வருமான வரி செலுத்தவில்லை. எதிரியை 25 வருடமாக தெரியும். எதிரியின் கணவர் எனது அக்கா மகன். எதிரியின் பதிலறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் ஆமாம் படித்துபார்த்துள்ளேன். எதிரி சேகர் என்பவருக்கு காசோலை கொடுத்தாக சொல்லியுள்ளார் என்றால் சேகர் யார் என்றே எனக்கு தெரியாது. சேகர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியது. பதிலறிவிப்பை மறுத்து அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி அந்த பகுதியில் உள்ள பெண்களுக்கு கடன் வாங்கி கொடுத்து அது சம்மந்தமாக வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் தெரியாது. எதிரியின் குடும்பத்தில் எத்தனை பேர் உள்ளார் என்றால் எதிரியின் கணவர் சரவணக்குமார் மற்றும் அவரது மகன் உள்ளனர். எதிரி சேகர் என்பவரிடம் சோபியா என்பவர் மூலம் அறிமுகமாகி கடன் பெற்றுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி எதிரியை கொலை மிரட்டல் விடத்தாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய மொபைல் எண் 9942946735 என்றால் சரிதான். எதிரியின் மொபைல்நம்பர் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரியின் கணவர் மொபைல் நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய செல்போனில் உள்ளதா என்றால் தெரியாது. எப்போதும் என்னுடைய வீட்டில் 10 முதல் 12 இலட்சம் வரை வைத்திருப்பேன். புகார் அறிவிப்பு மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் எப்போது பணம் கேட்டு அனுகினார் என சொல்லவில்லை என்றால் 16.06.2022 ஆம் ஆண்டு காலை சுமார் 11.00 மணியளவில் எதிரி என்னுடைய வீட்டிற்கு வந்து பணம் வாங்கி சென்றார். அப்போது என்னுடைய மனைவி உடனிருந்தார். அதற்கு முன்பாக அவரது கணவரும் எதிரியும் பல முறை வந்துள்ளார்கள். நான் தாமதமாக பணம் கொடுத்தேன். இதற்கு முன் வந்த தேதி விவரங்கள் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் அதற்கு ஆதரவாக கையொப்பமிட்டு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணம் வாங்கினார். அதற்கு ஆதரவாக சிட்டி யுனியன் வங்கி காசோலையை கொடுத்தார். இரண்டு மாதத்தில் திருப்பி தருவதாகவும் சொன்னார். எதிரி மற்றும் எதிரியின் கணவர் உடன் போன் மூலம் பேசியுள்ளேனா என்றால் இல்லை. பக்கத்துவீடு என்பதால் நேரில் வருவார்கள். எனது மொபைல்

**போனில் இருந்து 03.08.2022 ம் தேதி காலை 8.14 மணிக்கு எதிரியின் கணவர் சரவணக்குமார் என்பவரது மொபைல் போனுக்கு தொடர்பு கொண்டு பேசியுள்ளேன் என்றால் இருக்கலாம். நான் முதன் முதலில் அப்போது என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேனா என்றால் எனக்கு தெரியும் அவர் என்னுடைய மாப்பிள்ளை. சேகருக்கு பணம் கொடுக்க வேண்டியது சம்மந்தமாக போன் செய்து பணம் கேட்டேன் என்றால் இல்லை. அப்போது சரவணக்குமாரை தகாதா வார்த்தைகளால் பேசினேன் என்றால் இல்லை. சரவணக்குமார் தன்னுடைய இனத்தார் தன்னுடைய சொல்லுக்கு கட்டுப்படவேண்டும் என்று சொன்னேன் என்றால் இல்லை. சேகர் பணம் கொடுத்தால் அதை திருப்பி கொடுக்கவில்லை என்றால் நான் தான் கட்டப்பஞ்சாயத்து பேசி நான் வாங்கி தருவேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. 03.08.2022 காலை 10.55 மணிக்கு எதிரியின் கணவருக்கு போன் செய்து மிரட்டியுள்ளேன் என்றால் இல்லை. மீண்டும் 11.08.2022 அன்று போன் செய்து உள்ளேன் என்றால் இல்லை. நான் சொன்ன வாறு எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு எதிரி பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. சேகரிடம் பெற்ற கடனுக்கு கட்டப்பஞ்சாயத்து செய்ய சென்றேன் என்றாலும், அவரிடம் கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிமீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.01.21 16:14:11 +0530

Judicial Magistrate No.I

Dindigul.